# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி MBA., LLM.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

2025-ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 17-ஆம் நாள், வியாழக்கிழமை

**இ.ம.எண். 11 /2025 இன் அ.வ.எண்.558/2004**

## CNR No. TNSA13-000101-2004

1. பழனிமுத்து கவுண்டர் (இறந்தவர்)
2. ஸ்ரீராமன்
3. சின்னு
4. பாலு
5. தங்கராசு (இறந்தவர்) . . . மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

1. ராஜகோபால்
2. சந்திரன்
3. ராஜேந்திரன்
4. ராஜமாணிக்கம்
5. முருகேசன்

அனைவரும், தங்களுக்காகவும் நாவக்குறிச்சி
கிராம ஜங்கமர் சமுதாயத்திற்காகவும் . . . எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 14.07.2025-ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.R.ராஜேந்திர மகஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவை Pw2 சாட்சியத்தை நீக்கரவு செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்துள்ளனர்.

2. **<u>மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

மனுதாரர் மேற்படி வழக்கில் 2 ம் பிரதிவாதி என்றும், இம்மனுவை தனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகள், அருள்மிகு காட்டுக்கோட்டை வடசென்னிமலை பாலசுப்ரமணியன் திருக்கோயிலின் அலுவலர் மற்றும் ஆறகளூர் அருள்மிகு காமநாதேஸ்வரர் திருக்கோயில் வகையறாக்களின் நிர்வாக செயல் அலுவலரையும் தாவா கோவில்கள் சம்மந்தமாக தங்கள் தரப்பு சாட்சிகளாக விசாரிக்க இ.ம.எண்.10/2024 தாக்கல் செய்திருந்ததாகவும், அந்த மனுவானது அனுமதிக்கப்பட்டது என்றும், அம்மனுவில் தாவா கோவில் சம்பந்தமாக எவ்விதமான ஆவணங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இ.ம.எண்.10/2024 ல் சமூகம் நீதிமன்றம் அவர்கள் பிறப்பித்த உத்திரவிற்கு மாறாகவும், முரணாகவும் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சிகளுக்கு சாட்சி சம்மன் படி மெமோவில் மேற்படி கோவில்கள் சம்பந்தமான ஆவணங்களை கொண்டு வரசொல்லியும் மற்றும் தாவா கோயில்கள் எந்த சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்று சாட்சியம் அளிக்குமாறும் சாட்சி சம்மன் படி மெமோவில் குறிப்பிட்டுள்ள விவரம் கடந்த 03.07.2025 ம் நாள் அருள்மிகு வடசென்னிமலை பாலதண்டாயுதபாணி திருக்கோயில் நிர்வாக அலுவலரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஆரம்பிக்கும்போது மேற்படி விபரம் தெரிய வந்ததாகவும் கூறியுள்ளனர்.

இ.ம.எண்.10/2024 மனுவில் உள்ள உத்தரவினை பார்வையிட்டபோது மனுவிற்கும் மனுவில் உள்ள உத்திரவிற்கும், சாட்சி சம்மனில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளும், முற்றிலும் முரண்பட்டதாக உள்ளது என்றும், எனவே மேற்படி

சாட்சியை பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும், சமூகம் நீதிமன்ற உத்திரவிற்கு முரணாக Pw2 சாட்சியமான நிர்வாக அலுவலரால் அளித்துள்ள முதல் சாட்சியம் சட்டவிரோதமானது என்றும், அதனை நீக்கரவு செய்ய உத்திரவு வழங்க வேண்டியது மிகவும் அவசியம் எனவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>1ம் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்து 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்கள். சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், நாவக்குறிச்சி கிராமத்தில் இருக்கும் வழக்கு கோவில்களும், அதற்குண்டான சொத்துக்களும் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலும், நிர்வாகத்திலும் இருந்து வருவதாக வழக்கு நிலுவையில் இருக்கும்போது கோவில்களுக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களை இந்து அறநிலையத்துறை நாவக்குறிச்சி கிராமத்திற்கே நேரில் வந்து, கோவில்களுக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களை 20.07.2023–ல் பொது ஏலம் விட்டுள்ளதாகவும், மேலும் நாவக்குறிச்சி கிராமத்தில் தாவா கோவில்கள் இந்து அறநிலையத்துறைக்கு சம்மந்தப்பட்டது என்று அறிவிப்பு பலகையும் வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோவில்கள் பிரதிவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளதாக வழக்கில் பதிலுரை தாக்கல் செய்துள்ளதாலும், பிரதிவாதிகளின் சமுதாயத்தை தவிர வேறு யாருக்கும் நிர்வாக உரிமை இல்லை என்று குறிப்பிட்டிருப்பதாலும், மேற்படி வழக்கு கோவில்களின் செயல் அலுவலர்களை ஆவணங்களுடன் இந்து சமய அறநிலையத்துறையில் பராமரிக்கும் பதிவேடுகள் குறித்தும், தாவா கோவில்களை எவ்வாறு நிர்வாகம் செய்து வருகின்றனர் என்பது குறித்தும் சாட்சியம் அளிக்க வேண்டி தான் இரண்டு செயல் அலுவலர்களுக்கும் விவரங்கள் தெரிவித்து சம்மன் அனுப்பப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கிற்கு சம்மந்தமில்லாத கோவில்கள் குறித்தோ, நிர்வாகம் குறித்தோ, செயல் அலுவலர்களுக்கு சம்மன் அனுப்பவில்லை என்றும், தாவா கோவில்களின்

நிர்வாகம் குறித்து சாட்சியம் அளிக்க கோவில்களின் செயல் அலுவலர்கள் பதிவேடுகளுடன் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டுமென்று தான் நீதிமன்றத்தில் இருந்து சம்மன் அனுப்பப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு அனுப்பப்பட்ட சம்மனில் எந்த முறைகேடும் இல்லை எனவும், மேலும் அவ்வாறு விசாரணை செய்தால் தான் எதிர்மனுதாரர்கள் ஒப்படைத்துள்ள ஆவணங்கள் சரியானதா என்றும், இந்து அறநிலைத்துறை பதிவேடுகளான தாவா கோவில்களுக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களை எடுத்து வந்து சாட்சியம் அளித்தால் தான் வழக்கில் தீர்வு காண இயலும், தாவா கோவில்களின் செயல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள சம்மனில் சட்ட விரோதமான ஆவணங்கள் கோரப்படவில்லை என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.**

5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. இவ்வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தாவாவில் கோரியுள்ள கோவில்கள் அனைத்தும் கிராம பொது கோவில்கள் என்றும், மேற்படி கோவில்களை நிர்வகிப்பது தொடர்பாகவும், திருவிழாக்கள் நடத்துவது தொடர்பாகவும், பிரதிவாதிகள் மட்டுமே உரிய நபர்கள் இல்லை என்று விளம்புகை பரிகாரமும், வாதிகளின்றி பிரதிவாதிகள் தாவா கோவில்களில் திருவிழாக்கள் நடத்தக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் இம்மனுவில் இ.ம.எண்.10/2024-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு மாறாக Pw2 -விற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதனால் Pw2 ன் சாட்சியத்தை நீக்கரவு செய்ய வேண்டும் எனவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

இவ்வழக்கில் இ.ம.எண்.10/2024 ஆனது தாவா கோவில்களில் வடகரையான் முத்தையா கோவில்களை தவிர மற்ற கோவில்கள் அனைத்தும் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்திலும், பராமரிப்பிலும் இருந்து வருகிறது

என்பதை நிரூபிக்க மனுவில் கோரியவாறு ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டி இந்து சமய அறநிலையத்துறையில் பணிபுரியும் சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், வடசென்னிமலை அருள்மிகு பாலதண்டாயிதபாணி திருக்கோவிலின் நிர்வாக அலுவலர் மற்றும் ஆறகளூர் அருள்மிகு ஸ்ரீகாமனாதேஸ்வரர் திருக்கோவிலின் நிர்வாக அலுவலர் அவர்களையும் தாவாவில் சாட்சியாக விசாரிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மனுவில் இந்நீதிமன்றம் கடந்த 21.04.2025 அன்று மனுவில் கோரியவாறு வடசென்னிமலை அருள்மிகு பாலதண்டாயிதபாணி அலுவலர் மற்றும் ஆறகளூர் ஸ்ரீகாமனாதேஸ்வரர் திருக்கோவிலின் நிர்வாக அலுவலர் ஆகியோர்களை ஆவணங்களுடன் ஆஜராக வேண்டி உத்தரவு பிறப்பித்தது.

மேலும் இ.ம.எண்.10/2024–ன் மனுவில் தாவா கோவில்கள் தொடர்பான ஆவணங்களுடன் சாட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்றே பரிகாரம் கேட்டு அதன்படி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி மனுவின் உத்தரவின் பேரில் கடந்த 29.04.2025 அன்று அருள்மிகு வடசென்னிமலை பாலதண்டாயிதபாணி திருக்கோவிலின் நிர்வாக அலுவலர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி PW2 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அன்றைய தினம் அழைப்பாணையில் குறிப்பிட்ட ஆவணங்களை எடுத்து வரவில்லை என்பதால் வாய்தா வழங்கப்பட்டு மீண்டும் 24.06.2025 அன்று மேற்படி சாட்சியானவர் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகினார். அன்றைய தினம் மீண்டும் மேற்படி சாட்சியானவர் வாதி தரப்பில் முதல் விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் Ex.X1 மற்றும் Ex.X.2 குறியீடு செய்யப்பட்டது.

மேற்படி Pw2 முதல் விசாரணை செய்யப்பட்ட தினங்களான 29.04.2025 மற்றும் 24.06.2025 ஆகிய இரு தினங்களிலும் சாட்சி விசாரணையானது பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையிலேயே நடைபெற்றது. மேற்படி தினங்களில் சாட்சி விசாரணையின் போதோ ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட போதோ பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை. இந்நிலையில் வழக்கானது Pw2 குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது. கடந்த 03.07.2025 அன்று Pw2 ஆனவர் நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஆஜராகினார். ஆனால் அன்றைய தினம் பிரதிவாதிகள் மேற்படி

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை. அதனால் வழக்கானது மீண்டும் 07.07.2025–க்கு ஒத்தி வைக்கப்பட்டது. அன்றைய தினம் பிரதிவாதிகள் Pw2 சாட்சியத்தை நீக்கரவு செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி இ.ம.எண்.10/2024 ன் உத்தரவையும் Pw2–விற்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையையும் பரிசீலனை செய்கையில் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் தாவா கோவில்கள் தொடர்பான ஆவணங்களுடன் சாட்சிகள் ஆஜராக வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அழைப்பாணையில் தாவா கோவில்களின் பெயர்கள் தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட முரண்பாடுகளால் பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதகமும் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று காண முடிகிறது.

மேலும் இவ்வழக்கானது கடந்த 2004ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு தற்போது வரை நிலுவையிலிருந்து வருகிறது. இந்நிலையில் பிரதிவாதிகள் Pw2 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் அவரது சாட்சியத்தை நீக்கரவு செய்ய மனு தாக்கல் செய்திருப்பது இவ்வழக்கை காலம் தாழ்த்த வேண்டி தாக்கல் செய்யப்பட்ட மனுவாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் Pw2–வின் சாட்சியம் இவ்வழக்கிற்கு தொடர்பான ஆவணங்கள் குறித்தே அமைந்துள்ள நிலையில் அவரது சாட்சியத்தை நீக்கரவு செய்வது அவசியமற்ற ஒன்றாகும்.

எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

7. தீர்வு:

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 17–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.07.17 18:43:24 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

<u>மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.07.17 18:43:31 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 11/2025 இன்
அ.வ.எண்.558/2004
நாள் : 17.07.2025